# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

## க.பொ.த (சாதாரணதர)ப்பரீட்சை - 2019

## இரண்டாம் தவணை

| 62 | T | I,II |
|---|---|---|

குடியியற்கல்வி I,II

நேரம் - 3மணித்தியாலம்

சுட்டெண் ......................................

**கவனிக்க:-**

(i) எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

1. தேசிய அரசு ஒன்றின் மூலக்கூறாகக் குறிப்பிப்பவது
   1) பாராளுமன்றம் 2) இறைமை 3) நீதிமன்றம் 4) சட்டத்துறை
2. பின்வருவனவற்றுள் இரு கட்சி முறையைக் கொண்ட நாட்டினைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.
   1) பிரித்தானியா 2) இலங்கை 3) வடகொரியா 4) ஐக்கிய அமெரிக்கா
3. கி.பி 15ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் ஐரோப்பாவின் சமுதாய அமைப்பு முறை தொடர்பான கூற்றுக்களில் **தவறானது?**
   1) வர்த்தகப் பொருளாதார முறை தோற்றம் பெற்றது
   2) முதலாளித்துவ வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்றது
   3) நிலமானிய சமுதாய அமைப்பு முறை தோற்றம் பெற்றது
   4) தேசிய அரசு முறைமை தோற்றம் பெற்றது
4. இலங்கையில் அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகளை பிரித்து ஒதுக்கீடு செய்வது
   1) அரசாங்க சேவை ஆணைக்குழுவாகும்
   2) தேர்தல்கள் ஆணைக்குழு வாகும்
   3) பொதுச்சேவை ஆணைக்குழுவாகும்
   4) எல்லை நிர்ணய ஆணைக்குழுவாகும்.
5. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
   1) 25 2) 29 3) 196 4) 225
6. மனிதன் தனது சமூக வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள்
   1) உரிமைகள் எனப்படும் 3) சமத்துவம் எனப்படும்
   2) சுதந்திரம் எனப்படும் 4) கடமைகள் எனப்படும்
7. "அரசுக்குரிய வரியைச் செலுத்துதல்" இது எவ்வகைக் கடமையாகும்
   1) ஒழுக்கவியல் கடமை 3) சமயக் கடமை
   2) சமூகக் கடமை 4) சட்டரீதியான கடமை



(பக் 2 ஐப் பார்க்க)

kalvi.lk

8. பாராளுமன்ற அரசாங்க முறையில் நாமநிர்வாகி (பெயரளவிலான) நிர்வாகி யாரால் தெரிவு செய்யப்படுகின்றார்.
   1) சனாதிபதி 2) பிரதம மந்திரி 3) அமைச்சரவை 4) சபாநாயகர்
9. பின்வருவனவற்றுள் கூட்டாட்சி முறை நிலவும் நாடு **அல்லாதது**
   1) அவுஸ்திரேலியா 2) இந்தியா 3) சுவிட்சர்லாந்து 4) பிரான்ஸ்
10. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சி முறை
   1) ஒற்றையாட்சி 3) கூட்டாட்சி
   2) சட்டத்தின் ஆட்சி 4) சர்வாதிகார ஆட்சி
11. மாகாண சபையொன்றில் முதலமைச்சரை நியமிப்பவர்
   1) சனாதிபதி 3) மாகாண ஆளுநர்
   2) பிரதமமந்திரி 4) பிரதம செயலாளர்
12. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரமாகக் கூறக்கூடியது
   1) நிதி நடவடிக்கை 2) வீடமைப்பு 3) சுகாதாரம் 4) கல்வி
13. மனிதனால் உரிமையாக்கிக்கொள்ளப்பட்ட அறிவு, நம்பிக்கை,கலாசாரம், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, முதலிய அனைத்தும்.
   1) சமூகம் எனப்படும் 3) ஒழுக்க நெறிகள் எனப்படும்
   2) பண்பாடு எனப்படும் 4) மரபுகள் எனப்படும்
14. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல் எனும் பன்மைப் பண்பாட்டுக் கொள்கையை மிகவும் பயனுடையதாக்கிய நாடு
   1) ஜப்பான் 2) சுவிட்சர்லாந்து 3) தாய்லாந்து 4) பிரித்தானியா
15. பல் கலாசார சமூகமொன்றில் நல்லாட்சியின் காரணமாக ஏற்படும் முக்கியமான விளைவு
   1) ஒருவரை ஒருவர் மதிக்கப்பழகுதல்
   2) பல அரச கருமமொழிகளைக் கற்று பயன்படுத்துதல்
   3) பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வை பெற முடிதல்
   4) பல்வேறு இன பிரிவுகள் மற்றும் சமூகங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை உறுதிசெய்தல்
16. “சமனற்ற வகையில் வருமானம் பகிரப்படுவதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்” இது நல்லாட்சியின் எவ்வகையான பண்பு
   1) சமூகம் 2) அரசியல் 3) பொருளாதாரம் 4) பண்பாடு
17. மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது தொடர்பில் ஏற்படும் ஆசைகள் எவ்வாறு அழைக்கப்படும்
   1) உற்பத்தி 3) விருப்பங்கள்
   2) பொருளாதார முறை 4) பொருட்களும், சேவைகளும்
18. உற்பத்தி நடவடிக்கைகளின் போது மூலதனம், மற்றும் முயற்சி ஆகியவற்றிற்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் முறையே
   1) வட்டி, இலாபம் 2) இலாபம், கூலி 3) வட்டி, கூலி 4) இலாபம், வட்டி
19. பின்வருவனவற்றுள் முதலாளித்துவப் பொருளாதார முறை நிலவும் நாடுகளைக் கொண்ட விடை எது?
   1) அவுஸ்திரேலியா, சீனா 3) கியுபா, வடகொரியா
   2) வடகொரியா, அவுஸ்திரேலியா 4) ஜப்பான், பிரித்தானியா
20. உலக மயமாக்கலின் விளைவாக இலங்கை எதிர்நோக்கியுள்ள **அனுகூலமான** விளைவானது
   1) பல்வகைமையுடன் கூடிய பொருளாதார அபிவிருத்தி ஏற்படல்
   2) உள்நாட்டு ஆரம்பக் கைத்தொழில்கள் பாதிப்புறல்
   3) மூளைசாலிகள் வெளியேற்றம் துரிதமாக இடம்பெறல்
   4) வெளிநாட்டு முதலீடுகளும் தொழில்நுட்பமும் வெளியேறுதல்



(பக் 3 ஐப் பார்க்க)

kalvi.lk

21. எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றம் அடையும் போது தனிநபரினுள் ஏற்படும் உளமுரண்பாடு, வீட்டு வன்முறை போன்றவை பின்வரும் எந்த மோதலுக்கு உதாரணமாகும்.
    1) உள்நாட்டு மோதல்
    2) வெளிப்படையான மோதல்
    3) கொள்கை ரீதியான மோதல்
    4) நுண்மையான மோதல்
22. தொழிலாளர்களுக்கிடையில் தொழில் ரீதியான மோதல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை சனநாயக ரீதியில் தீர்ப்பதற்கு பயன்படும் மோதல் தீர்வு முறை
    1) இணக்கப்பாடு
    2) கலந்துரையாடல்
    3) பேரம் பேசுதல்
    4) ஆலோசனைகளை முன்வைத்தல்
23. மோதல்களை தவிர்ப்பதற்காக தனிப்பட்ட ஒருவரால் வளர்த்துக்கொள்ளக் கூடிய தனிநபர் சார்ந்த குணவியல்புகளை உள்ளடக்கும் விடைத்தொகுதி
    1) பொறுமை, தெளிவாக முடிவெடுத்தல், அனுதாபம் செலுத்துதல்
    2) பயன் உறுதியுள்ள தொடர்பாடல், ஆக்கபூர்வமான சிந்தனை, செவிமடுத்தல்
    3) நேர்மை, கருணை, பிறரை மதித்தல்
    4) கடமையைச் செய்தல், பிறரை மதித்தல், அகிம்சைப்பண்பு
24. சமாந்தரக் குழுக்களிடையே தோன்றும் முரண்பாடுகளின் போது அதனை தீர்ப்பதற்காக பயன்படும் மோதல் தீர்வு முறை
    1) தீர்ப்புக் கூறல்
    2) உடன்படல்
    3) ஆலோசனை கூறுதல்
    4) கலந்துரையாடல்
25. பின்வருவனவற்றுள் சமூகச் சூழலில் அடங்கும் மனிதனின் தலையீட்டால் கட்டியெழுப்பப்பட்ட இரண்டு விடயங்கள் ஆவன
    1) காலநிலை, சாதிகள்
    2) உரிமைகள், கடமைகள்
    3) மழைவீழ்ச்சி, மரபுரிமைகள்
    4) விலங்குகள், தாவரங்கள்
26. நீர் அமிலத்தன்மை அடைவதற்கு காரணமான வளியில் உள்ள வாயு எது?
    1) ஒட்சிசன்
    2) ஆகன்
    3) நைதரசன்
    4) காபனீரொட்சைட்
27. இலங்கையில் உச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தின் தலைவர்
    1) சட்டமா அதிபர்
    2) பிரதம நீதியரசர்
    3) சனாதிபதி
    4) நீதி அமைச்சர்
28. மேல்நீதி மன்றத்தின் அதிகாரங்கள் இரண்டைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
    A- அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறுதல்
    B- பாராளுமன்ற தேர்தல் தொடர்பான முரண்பாடுகளை விசாரணை செய்தல்
    C- கடற்பரப்பு குற்றச் செயல்கள் தொடர்பான நீதி அதிகாரங்கள்
    D- மாகாண சபைகளுக்குரிய கட்டளைகளை விதித்தல்
    E- நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை ஆராய்தல்
    1) A, B    2) B, C    3) C, E    4) C, D
29. போதியளவு காட்சிகள் இல்லாத வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரம் கொண்டவர்
    1) நீதி அமைச்சர்
    2) பிரதம நீதியரசர்
    3) சட்டமா அதிபர்
    4) சொலிஸ்டர் ஜெனரல்
30. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) பதவி இலங்கையில் எந்த அரசியல் யாப்பின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டது
    1) கோல்புறூக் அரசியலமைப்பு
    2) சோல்பரி அரசியல் யாப்பு
    3) 1ம் குடியரசு அரசியல் யாப்பு
    4) 2ம் குடியரசு அரசியல் யாப்பு
31. இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகளவு உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்ட மாகாணம் எது? (01/05/2017 இன் தகவல்களின் படி)
    1) மேல்மாகாணம்    2) மத்தியமாகாணம்    3) கிழக்குமாகாணம்    4) தென்மாகாணம்


(பக் 4 ஐப் பார்க்க)
kalvi.lk

32. இலங்கையின் சமதான நீதவான்களை நியமனம் செய்யும் அதிகாரம் கொண்டவர்
    1) பிரதம நீதியரசர்
    2) நீதி அமைச்சர்
    3) சனாதிபதி
    4) சட்டமா அதிபர்

33. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை
    1) 10   2) 30   3) 19   4) 20

34. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுச் சுகாதாரச் சேவைகளில் **அடங்காத** பணியாவது
    1) முறையற்ற கட்டிடங்களை அகற்றுதல்
    2) பொது மலகூடங்களை அமைத்தலும் திருத்துதலும்
    3) நீர் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
    4) வடிகால்களை அமைத்தலும் திருத்துதலும்

35. 19வது அரசியல் திருத்த சட்டத்தின்படி சனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை வருடங்களாகும்
    1) 5 வருடங்களாகும்
    2) 6 வருடங்களாகும்
    3) 4 வருடங்களாகும்
    4) 4½ வருடங்களாகும்

36. போர், விமானப்படை, கடற்படை, இராணுவம் தொடர்பான குற்றங்களை விசாரனை செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றமாவது
    1) நீதவான் நீதிமன்றம்
    2) மாவட்ட நீதிமன்றம்
    3) மேல்நீதிமன்றம்
    4) மேன்முறையீட்டு நீதிமன்றம்

37. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் அடிப்படையாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
    1) பிள்ளையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
    2) பிள்ளையின் கல்வியை உறுதிப்படுத்துதல்
    3) பிள்ளைக்கு அதிகபட்ச நன்மையை வழங்குதல்
    4) பிள்ளையின் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

38. ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உலக தொழிலாளர் அமையத்தினால் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் சங்கம் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது
    1) 1987   2) 1988   3) 1989   4) 1999

39. A – மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
    B – நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நிறைவேற்றல்
    C – பொதுமக்களின் குறைபாடுகளை முன்வைத்தல்
    D – சட்ட உருவாக்கத்திற்கு ஆலோசனைகளை வழங்கல்
    E – அரசியல் யாப்பை பாதுகாத்தல்
    மேற்கூறிய கூற்றுக்களுள் சட்டத்துறையின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிக்கும் விடைகள்
    1) B,C   2) C, D   3) A, C   4) D, E

40. பின்வரும் ''அ'' நிரலில் பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்புச்சீர்த்திருத்தங்களும் ''ஆ'' நிரலில் அரசியல் யாப்புக்கள் மூலம் இலங்கையில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளும் குறிப்பிட்டுள்ளன அவற்றினை சரியாக பொருத்தும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. 1833 கோல்புறூக் யாப்பு | A- அரசியலமைப்பு நீதிமன்றம் |
| 2. 1910 குறூமக்கலம் யாப்பு | B- வரையறுக்கப்பட்ட வாக்குரிமை |
| 3. 1931 டொனமூர் யாப்பு | C- சட்டவாக்க, சட்ட நிருவாகசபைகள் |
| 4. 1947 சோல்பரி யாப்பு | D- நிர்வாகக்குழுமுறை |
| | E- இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம் |

    1) C,B,D,E   2) A,B,E,C   3) A,B,E,D   4) C,B,E,D



(பக 5 ஐப பாாகக)

kalvi.lk

# குடியியற்கல்வி - II

- **முதலாம்** வினா கட்டாயமானது
- முதலாம் வினாவுக்கும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1.
   i. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் **இரண்டு** குறிப்பிடுக.
   ii. அரசாங்க முறைகளின் வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.
   iii. சமஷ்டி ஆட்சி முறை தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டினைக் குறிப்பிடுக.**
   iv. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகியதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்பு தொடர்பான காரணிகள் **இரண்டினைக் குறிப்பிடுக.**
   v. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   vi. சர்வதேச மோதல்களின் **இரு** வகைகளைக் குறிப்பிடுக.
   vii. சட்டமா அதிபரின் பிரதான **இரண்டு** பணிகளைக் குறிப்பிடுக.
   viii. சட்டத்தின் மூலாதாரங்கள் **இரண்டு** எழுதுக.
   ix. 1972ம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பின் மூலம் இலங்கைக்கு கிடைத்த **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக.
   x. சூழலில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் வாழ்க்கைக்கு உதவும் சேவைகள் **இரண்டு** குறிப்பிடுக

Education கல்வி

2. **"தேர்தல்கள் மூலம் ஆட்சி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது சனநாயக ஆட்சி முறையின் பிரதான அம்சமாகும்".**
   i. இலங்கையில் தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் ஆட்சி நிறுவனங்கள் **இரண்டினைப் பெயரிடுக.** (2 புள்ளிகள்)
   ii. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் **மூன்று** தருக (3 புள்ளிகள்)
   iii. தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

3. **"சகல பொருளாதார முறைமைகளிலும் எதிர்நோக்க நேரிடுகின்ற பிரச்சினைகள் பொருளாதாரப் பிரச்சினைகள் எனப்படுகின்றன"**
   i. பொருளாதாரப் பண்டங்களின் உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தக்கூடிய **இரு** பிரதான நுட்ப முறைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
   ii. பொருளாதாரமல்லாப் பண்டங்கள் சில வேளைகளில் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடைகின்றன இதற்கு **மூன்று** உதாரணங்கள் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   iii. பொருளாதார முறையினுள் நடைபெறும் செயற்பாடுகளின் பிரதானமான மூன்று பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



(பக் 6 ஐப் பார்க்க)

kalvi.lk

4. **"அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகார பீடத்திடம் மையப்படுத்தப்பட்டிருப்பின் அது ஒற்றையாட்சி முறையாகும்"**

   i. ஒற்றையாட்சி முறையின் பண்புகள் பற்றி கருத்துக்கள் கூறிய அரசியலறிஞர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

   ii. ஒற்றையாட்சி அரசு என்பதில் இருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது யாது? (3 புள்ளிகள்)

   iii. a. ஒற்றையாட்சி முறையின் நன்மைகள் இரண்டு எழுதுக? (2 புள்ளிகள்)

   b. ஒற்றையாட்சி முறையின் பொதுவான பண்புகள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

5. **"தனிநபர் ஒருவரின் மனதில் ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிகளே மோதலுக்கு ஆரம்ப காரணியாகும்"**

   i. மனதில் அமைதியை ஏற்படுத்தி கொள்வதற்கான வழிமுறைகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

   ii. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

   iii. a. கலந்துரையாடல் மூலம் மோதலைத் தீர்க்க மேற்கொள்ளப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

   b. கலந்துரையாடல் மூலம் மோதல் தீர்வுகாணும் முறையின் பண்புகள் **இரண்டு** குறிப்பிடுக (2 புள்ளிகள்)

6. **"நீதி என்பது சட்டத்துடன் இணைந்த சிறப்பான மற்றுமொரு எண்ணக்கருவாகும்"**

   i. சட்டத்தின் பிரதான வகைகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

   ii. சட்டத்தின் பண்புகள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   iii. இலங்கையில் நீதிமன்ற முறையில் உள்ள உயர்வான நீதிமன்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒரு நீதிமன்றத்தின் அதிகாரங்களை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

7. **"மனித உரிமைகள் மனிதன் வாழ்வதற்கும் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும் ஓர் அடித்தளமாக அமைகின்றது"**

   i. மனிதன் தனது உரிமைகளைப் பெற்றுக் கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   ii. இலங்கையில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   iii. இலங்கையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்
க.பொ.த.(சாதாரணதர)ப்பரீட்சை - 2019
இரண்டாம் தவணை

| குடியியற்கல்வி - I,II | விடைகள் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## குடியியற்கல்வி - I

| | | | |
|---|---|---|---|
| 1. (2) | 11. (3) | 21. (4) | 31. (4) |
| 2. (1) | 12. (1) | 22. (3) | 32. (2) |
| 3. (3) | 13. (2) | 23. (1) | 33. (4) |
| 4. (4) | 14. (2) | 24. (2) | 34. (3) |
| 5. (2) | 15. (4) | 25. (2) | 35. (1) |
| 6. (1) | 16. (3) | 26. (4) | 36. (1) |
| 7. (4) | 17. (3) | 27. (2) | 37. (3) |
| 8. (2) | 18. (1) | 28. (3) | 38. (3) |
| 9. (4) | 19. (4) | 29. (3) | 39. (1) |
| 10. (3) | 20. (1) | 30. (4) | 40. (1) |

($40\times 1 = 40$ புள்ளிகள்)

## குடியியற்கல்வி - II

01)

i.

- எல்லா பிரசைகளையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதில் உள்ள சிரமம்
- தற்கால அரசுகளில் நிலப்பரப்பு விசாலமாகக் காணப்படல்
- அரசுகள் அதிக சனத்தொகையைக் கொண்டிருத்தல்
- சமூகத்தேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii. பாராளுமன்ற அரசாங்கமுறை, சனாதிபதி அரசாங்கமுறை

(இரண்டையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

iii.

- சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளின் சிக்கலானதன்மை
- நிதி தொடர்பான மத்திய அரசின் பலம்
- 2 ஆம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட அரசியல் போட்டி நிலைமை
- தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டமை
- இனப்பல்வகைமை
- சர்வதேச வியாபாரமும் சர்வதேச நடவடிக்கைகளும்
- தேசிய பொருளாதார அபிவிருத்தி
- இன, மத, மொழி சமய வேறுபாடுகளுக்கு தீர்வு காணவேண்டிய நிலைமை
- தரைத்தோற்ற வேறுபாடு காரணமாக பொருளாதார அபிவிருத்தியை அடைவது கடினமானமை

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

iv.

- சேனன் குத்திகன் ஆக்கிரமிப்பு
- பண்டு, பாரிந்த குழுவினரின் ஆக்கிரமிப்பு
- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
- மேலைத்தேய ஐரோப்பிய நாட்டவரின் குடியேற்றவாத ஆக்கிரமிப்பு

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

v.

- எதனை எந்தளவு உற்பத்தி செய்வது?
- எவ்வாறு உற்பத்தி செய்வது?
- யாருக்காக உற்பத்தி செய்வது?

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)


kalvi.lk

vi. கொள்ளை ரீதியான மோதல், பொருளாதார ரீதியான மோதல் (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

vii.

- உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வழக்குகளின் போது பங்குபற்றல்
- அரசின் சார்பாக அல்லது அரசுக்கு எதிராக சகல சட்டங்களையும் கோவைப்படுத்துதல்
- அரசாங்க வழக்குகளின் போது தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்
- அரசு மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளின் போது அரசு சார்பில் அஜராகுதல்
- பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்
- மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையை நிறைவேற்றுவதற்கு தேவையான சிபார்சுகளை சனாதிபதியிடம் முன்வைத்தல்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

viii. அரசியல்யாப்பு, நீதிமன்றத் தீர்ப்புக்கள், பல்வேறு கட்டளைச் சட்டங்கள், பழக்கவழக்கங்கள், சமயம், சட்டவல்லுநர்களின் கருத்துக்களும் சிந்தனைகளும் (யாதேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ix.

- ஒரு சபைப் பாராளுமன்றம் தேசிய அரசுப்பேரவை எனப் பெயர் மாற்றப்பட்டது.
- ஆளுநர் நாயகம் பதவி நீக்கப்பட்டு பெயரளவு சனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்டது
- மேன் முறையீட்டு நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது
- அடிப்படை உரிமைகள் அத்தியாயம் முதன் முதலாக யாப்பில் சேர்க்கப்பட்டது
- இலங்கை தன்னாதிக்கம் உள்ள குடியரசு ஆனது
- அரசாங்க சேவை ஆலோசனைச் சபை, அரசாங்க சேவை ஒழுங்காற்றுச்சபை, நீதிச்சேவை ஆலோசனைச்சபை, நீதிச்சேவை ஒருங்காற்றுச் சபை உருவாக்கப்பட்டன.

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

x. சூரிய ஒளி, காற்று, நீர் (காற்றுக்கு பதில் ஒட்சிசன் எனக் குறிப்பிட்டாலும் புள்ளி வழங்கவும்)

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

02)

i) பாராளுமன்றம், மாகாணசபை, நகரசபை, பிரதேச சபை

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறுதல்
- முறையான தகுதியுடையோருக்கு வாக்காளராவதற்கும், வேட்பாளராவதற்குமான உரிமை காணப்படுதல்
- சுதந்திரமான தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் காணப்படுதல்
- சுமுகமான சூழலில் தேர்தல் நடாத்துதல்
- தேர்தல், சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல் நடாத்தப்படுதல்.

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

- பிரதேச அபிவிருத்திக்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
- தேர்தல் தொகுதிகளுக்குப் பொறுப்பு கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கின்றது.
- அரசியல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மக்கள் தலைவர்களைப் பிரதேச மட்டத்தில் உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
- ஒரு நிர்வாகப் பரப்பில் காணப்படும் இனம், மதம், மொழி, வர்க்கம் ஆகிய வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாது அனைவரது கருத்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்கினால் 5 புள்ளிகள்


kalvi.lk

03)

i) முதலீட்டு நுட்பம், உழைப்பு நுட்பம் (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- நீர் எமக்கு இலவசமாகக் கிடைக்கின்ற போதும் போத்தலில் அடைக்கப்பட்ட நீரினைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்கு விலை செலுத்த வேண்டி ஏற்படுகிறது.
- சூரிய ஒளியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு விலை செலுத்த வேண்டி உள்ளது.
- நைதரசன் வாயுவைச் சேமித்து வாகனங்களைச் செலுத்தும் போது அவற்றிற்கு விலை செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

(மூன்றினையும் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)
இதே போன்று வேறு பொருத்தமான விடைக்கும் புள்ளிகள் வழங்கவும்)

iii) உற்பத்தி, விநியோகம், நுகர்வு

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் 3 + 2 = 5 புள்ளிகள்)

04)

i. பேராசிரியர் ஏ.வீ.டைசி, பேராசிரியர் சி.எப்.ஸ்ட்ரோங், பேராசிரியர் ஹர்மன் ஜே.பைனர்

(யாரேனும் இருவரைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii. அரசின் சட்டம், நீதி, நிர்வாகம் எனும் முத்துறை அதிகாரங்களும் ஒருமத்திய அரசினால் செயற்படுத்தப்படுமாயின் அவ்வரசு ஒற்றையாட்சி அரசு எனப்படும். இங்கு எவ்வகையிலும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படமாட்டாது. அதிகாரத்தை பன்முகப்படுத்தும் போது அரசாங்கத்தின் நிர்வாக அிதகாரங்கள் மாத்திரமே பிராந்திய அலகுகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(3 புள்ளிகள்)

iii.

a.

- நிறைவேற்றுத்துறையும், நீதித்துறையும் முழுநாட்டிற்கும் பொதுவானதாக அமைதல்.
- மத்தியஅரசு, மாநில அரசுகள், எனும் இருவேறு அதிகார நிறுவனங்கள் இன்மையால் அவற்றுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் இந்நாடுகளில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகும்.
- ஒற்றையாட்சி முறை பல்லின சமூகஅமைப்பு இல்லாத நாடுகளுக்கே மிகப்பொருத்தமானது இம்முறையின் கீழ் இலகுவாகவும் விரைவாகவும் அரசாங்கம் தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும்.

(இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

b.

- அரசின் இறைமை அதிகாரம் ஓரிடத்தில் (மத்திய அரசிடம்) குவிந்திருக்கும்
- சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்றும் முத்துறை அதிகாரங்கள் மத்திய அரசிடம் மையப்படுத்தப்பட்டிருக்கும்.
- சட்டம் இயற்றுவது தொடர்பான உயர் நிறுவனமாகச் செயற்படுவது மத்திய அரசின் சட்டத்துறையான பாராளுமன்றமாகும்.
- நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள் வரையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கும் உதாரணமாக இலங்கையில் செயற்படும் மாகாணசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள்.

  குறிப்பு :- மத்திய அரசின், சட்டத்துறை மூலம் நிறைவேற்றப்படும் சட்டம் ஒன்றின் மூலம் மாத்திரம் அதிகாரம், பன்முகப்படுத்தப்படல் மத்திய அரசுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மீண்டும் பெறுதல்

(இவற்றினை எழுதி இருந்தாலும் 3 புள்ளிகள் வழங்கவும்)



பக்கம் 4 ஐப் பார்க்க

kalvi.lk

05)

i)

- சமய நடவடிக்கைகளில் ஈடுபடல்
- உளவளத்துணைச் சேவைகளை நாடுதல்
- உளவியல் பயிற்சிகளில் ஈடுபடுதல்
- இயற்கைச் சூழலை அவதானித்தல்
- குறித்த நபரின் பிரச்சினையைத் தீர்த்தல்

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- இனப்பாகுபாடு
- சமூகபொருளாதார நிலை
- அரசியல் கருத்து முரண்பாடு
- ஏனைய சமயக் கொள்கைகளை மதிக்காமை

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

a.
- தனிப்பட்ட மோதல்
- குடும்ப மோதல்
- சொத்து தகராறு
- நிறுவனத்தினுள் மோதல்
- உள்நாட்டு மோதல்
- நாடுகளுக்கிடையிலான மோதல்
- நிறுவனங்களுக்கிடையிலான மோதல்

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

b.
- கலந்துரையாடலின் மூலம் தீர்வை நாடுதல்
- உடனடித்தீர்வு கிடைத்தல்
- செலவு குறைந்த முறையாக காணப்படுதல்
- தனிப்பட்டதாகவும் நம்பிக்கையுடையதாகவும் இருத்தல்
- முறை சாராத கட்டமைப்பைக் கொண்டிருத்தல்
- இரு தரப்பினருக்கும் வெற்றி – வெற்றி எனும் தீர்வு கிட்டுதல்

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

06)

i) தேசியச் சட்டம், சர்வதேசச்சட்டம் (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு ஒன்றின் மூலம் விதிக்கப்படுதல்
- நீதியானதும் நேர்மையானதுமான தன்மை காணப்படல்
- மனித நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிக்கப்படுதல்
- மாறுகின்ற சமூக தேவைகளுக்கேற்ப மாறும்தன்மை உடையதாயிருத்தல்
- சமூக நன்மையை நோக்காகக் கொண்டு விதிக்கப்படல்
- சட்டத்தை மீறுவோருக்கு தண்டனை வழங்கக் கூடியதாக இருத்தல்
- விளக்கமாகவும் தெளிவாகவும் இனங்காணக் கூடியதாக இருத்தல்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii) உயர்நீதிமன்றம், அல்லது உச்ச நீதிமன்றம் அல்லது மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மாகாண மேல் நீதிமன்றம் (3 புள்ளிகள்)

**உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்**

- அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறுதல்
- ஆலோசனை வழங்கும் நீதி அதிகாரங்கள்
- அடிப்படை உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரங்கள்


kalvi.lk

- விதிகளைத் தயாரிக்கும் நீதி அதிகாரம்
- இறுதி மேன் முறையீட்டை விசாரணை செய்யும் அதிகாரம்
- சனாதிபதி தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகரம்
- பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்

**(அல்லது)** (ஆகக் குறைந்தது நான்கு அதிகாரங்கள் ஆவது குறிப்பிட்டு இருந்தால் 2 புள்ளிகள் வழங்கவும்)

**மேன்முறையீட்டு நீதிமன்றம்**

- மேல்நீதிமன்றம் மற்றும் வேறு நீதிமன்றத் தீர்ப்புக்களை எதிர்த்துத் தொகுக்கப்படும் வழக்குகளை விசாரித்தல்
- பாராளுமன்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- ஆரம்ப நீதிமன்றங்களில் அறிக்கைகளைத் திறனாய்வு செய்வதற்கும் பரிசீலிப்பதற்குமான அதிகாரம்
- பல்வேறு கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் உ+ம் போபியஸ் கோபஸ் சர்சியோராரி, மெண்டி மூஸ், குவோ வொரண்டோ மற்றும் தடை உத்தரவுகள்

**(அல்லது)** (அனைத்து நான்கு அதிகாரங்களையும் குறிப்பிட்டு இருந்தால் 2 புள்ளிகள் வழங்கவும்)

மாகாண மேல்நீதிமன்றம்

- வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- மாகாண சபைகளுக்குரிய கட்டளைகளை விதித்தல்
- மாகாண சபைகளுக்கு ஹபயாஸ் கோபிரஸ் (ஆட்கொணர்வு மனு கட்டளைகளைப் பிறப்பித்தல்)
- ஆரம்பநிலை, நீதிவான், மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு எதிரான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்
- தொழில் நீதிமன்றத் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்

(நான்கு அதிகாரங்களையேனும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

07)

i) கி.பி 1215 பிரித்தானிய மக்னா காட்டா உடன்படிக்கை
கி.பி 1689 பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய உடன்படிக்கை
கி.பி 1776 அமெரிக்காவின் சுதந்திர பிரகடனம்
கி.பி 1789 மனிதன் மற்றும் பிரசைகளில் உரிமை தொடர்பான பிரான்சியப் பிரகடனம்
கி.பி 1917 ரஷ்யப் புரட்சி

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- கடை கரியாலயச் சட்டம்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவி உபகாரச் சட்டம்
- தொழிற்சாலைச் சட்டம்
- ஊதிய கட்டுப்பாட்டுச்சபைச்சட்டம்
- உழியர் சேமலாப நிதிச்சட்டம்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

- சர்வதேச உடன்படிக்கைகளுக்கேற்ப 1993 ஆம் ஆண்டு இலங்கையில் பெண்கள் பிரகடனம் வெளியிடப்பட்டமை.
- பெண்களுக்கென மகளிர் அமைச்சு ஏற்படுத்தியமை
- பெண்களுக்கு எதிராக ஏற்படும் வேறுபாடுகள் தொடர்பாக விசாரணை செய்ய தேசிய மாதர் குழு அமைக்கப்பட்டமை
- பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்களைப் புதிதாக வரைவிலக்கணப்படுத்தியமை
- பெண்களுக்கு எதிராக அவர்களது வதிவிடங்களில் ஏற்படும் கொடுமைகள் தொடர்பாக வீட்டுத் துன்புறுத்தல் பற்றிய சட்டத்தை அமுல்படுத்தியமை
- அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்களுக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சிறுவர், பெண்கள் அலகொன்றை ஏற்படுத்தியமை (CEDAW)

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்கினால் 5 புள்ளிகள்)


kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page